# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 12 /2018**

திரு. ஆர். ரவிச்சந்திரன்,
த/பெ ராமசாமி,
மாரியம்மன் கோவில் தெரு,
சே. பேட்டை & அஞ்சல்,
செஞ்சி வட்டம், விழுப்புரம்மாவட்டம்–604 152. . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம்–605 602. . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள்: 19 .6. 2018**

1. திரு. ஆர். ரவிச்சந்திரன், த/பெ ராமசாமி, மாரியம்மன் கோவில் தெரு, சே. பேட்டை & அஞ்சல், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் 14.3.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.12/2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் தனது விவசாய மின் இணைப்பு பதிவின் மீது நடவடிக்கை எடுத்து மின் இணைப்பு வழங்குகுமாறு மின்குறைதீர்ப்பாளர் முன்பாக மேல்முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 03.04.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. இதற்கிடையே எதிர் மனுதாரரின் சார்பாக செயற்பொறியாளர்/செஞ்சி, விழுப்புரம் மின்பகிர்மான வட்டம் அவர்கள் அலுவலகத்தில் மேல்முறையீட்டாளரிடம் சமரச முயற்சி மீதான உடன்பாடு ஏற்படுத்துவதற்கு 16.5.2018 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இருதரப்பினரும் ஏற்கும் வண்ணம் சமரச உடனபாட்டுக்கு வந்துள்ளதாகவும், ஆகவே சமரச உடன்பாட்டை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்து மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளருக்கு அனுப்பியுள்ள தனது 5.6.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளர் தன்னுடைய 05.06.2018 நாளிட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக அனுப்பிய 14.6.2018 நாளிட்ட கடிதத்தில் இருதரப்பிரனருக்கும் இடையே ஏற்பட்ட சமரச உடன்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் தன்னுடைய (மனு எண்.12/2018) மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதங்களில் உள்ள சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

<u>*மேல்முறையீட்டாளரின் 05.06.2018 நாளிட்ட கடிதம்*</u>

"

*பொருள்– மின்இணைப்பு பதிவு எண்.360 – மின்குறைப்பு தீர்ப்பாளர்,*
*மையத்தில் முறையீடு சமரச பேச்சுவார்த்தை – தொடர்பாக*

*பார்வை– 1. கடித எண்.த.நா.மி.கு/கோப்பு மனு எண்.12/2018 அ.எண்.327/18*
*நாள் 3.4.2018 அதன் அடிப்படையில்*

***********

*1. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கோட்டம் செயற்பொறியாளர் அலுவலகம் செஞ்சியில் 16.5.2018 காலை 11.00 மணியளவில் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையில் முழு சம்மதத்துடன் கலந்து கொண்டேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*2.* R. ரவிச்சந்திரன், த/பெ ராமசாமி, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சே. பேட்டை கிராமத்தை சார்ந்த நான் மேற்குறிப்பிட்ட பார்வையின்படியான தமிழ்நாடு மின்வாரிய குறைதீர்ப்பு மையத்தில் மனு செய்து இருந்தேன். அம்மனு மீது செயற்பொறியாளர்/இ&ப/செஞ்சி அவர்கள் நடத்திய விசாரணை ஏற்பட்ட பிரச்சனையும் இதன் மூலம் தீர்வு காணப்பட்டது. எனவே, தமிழ்நாடு மின்வாரிய குறைதீர்ப்பு மையத்தில் கொடுத்த புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*3.* நான் கோரியபடி வி.வி. பதிவு எண்.360ன் மீது எனக்கு விவசாய மின் இணைப்பு வழங்க சுமூகமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. எனவே, இதனை முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
Sd/xx xx xx
(R. ரவிச்சந்திரன்)

"

<u>மேல்முறையீட்டாளரின் 14.06.2018 நாளிட்ட கடிதம்</u>

பொருள்– தங்கள் அலுவலகத்தில் செயற்பொறியாளர் /இப/செஞ்சி அவர்கள் மீது கொடுத்த புகார் மனு திரும்ப பெறுதல் சம்பந்தமாக–

பார்வை– 1) கடித எண்.த.நா.மி.கு/மனு எண்.12/2018 அ.எண்.411/18 நாள் 22.5.2018.

2) கடித எண்.த.நா.மி.கு/கோப்பு மனு எண்.12/2018 அ.எண்.327/18 நாள் 3.4.2018.

***********

பார்வையில் தங்களால் அனுப்பப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் மனுதாரர் ஆகிய நானும், செயற்பொறியாளர்/இப/செஞ்சி அவர்களும் பேசி சுமூக தீர்வு ஏற்பட்டதின் அடிப்படையில் பார்வையின்படி உள்ள கடிதத்தை திரும்ப பெற்றுக் கொள்கிறேன். மேலும், பார்வையில் கடிதத்தின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என வேண்டி கேட்டுக் கொள்கிறேன். இம்மனு மீது மேல்முறையீடு ஏதும் செய்ய மாட்டேன் எனவும் உறுதி கூறுகிறேன்.

இப்படிக்கு
Sd/xx xx xx
(R. ரவிச்சந்திரன்) "

6. மேல்முறையீட்டாளர், தனது 5.6.2018 மற்றும் 14.6.2018 நாளிட்ட கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.12/2018 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திரு. ஆர். ரவிச்சந்திரன்,
த/பெ ராமசாமி,
மாரியம்மன் கோவில் தெரு,
சே. பேட்டை & அஞ்சல்,
செஞ்சி வட்டம், விழுப்புரம்மாவட்டம்–604 152.

2) மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம்–605 602.

3) தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – <u>**மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.